**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்**

**முன்னிலை - திருமதி. பி. வித்யா, எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், செஞ்சி,**

**2026 -ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 - ஆம் நாள், திங்கட்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.178/2025**

**CNR.No.TNVP18 - 000493 -2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | காவல் உதவி ஆய்வாளர் அவலூர்பேட்டை காவல் நிலையம். குற்ற எண். 238/2023 |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | A1) செல்வராஜ், த/பெ. ஏழுமலை, A2) சரசு, க/பெ. வடமலை, A3) சங்கரி, க/பெ. ஏழுமலை மேற்படி நபர்களின் வசிப்பிடம் விநாயகபுரம் கிராமம், மேல்மலையனூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | Details of absondance of the accused | --- |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 29.06.2023 |
| 9. | புகார் தேதி (Complaint) | 30.06.2023 |
| 10. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 16.07.2023 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 17.07.2023 |

| | | |
|---|---|---|
| 12 | Period of Bail | 2 நாட்கள் |
| 13 | Commitment | --- |
| 14 | Date of Questioning u/s 228 (or) 240 (or) 246 (or) 251 | 13.11.2025 |
| 15 | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி ( Commencement of Trial) | 04.03.2026 |
| 16 | Date of Examination in Chief and Cross Witnesses | Chief Cross<br>PW1 04.03.2026 04.03.2026<br>PW2 04.03.2026 04.03.2026<br>PW3 04.03.2026 04.03.2026<br>PW4 11.03.2026 11.03.2026 |
| 17 | விசாரணை முடிக்கப்பட்டது தேதி (Closure of Trial) | 11.03.2026 |
| 18 | Date of examination of accused u/s. 313 Crpc (or) 351 of BNSS | 16.03.2026 |
| 19 | தண்டனை அல்லது உத்தரவு | 16.03.2026 |
| 20 | Details of Victim Compensation Order | --- |
| 21 | Grant of Stay by Superior Courts and their Results. | --- |
| 22 | எதிரி மீது சுமத்தப்பபட்டுள்ள குற்றச்சாட்டுகள் | 1-ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), r/w 4 of TNPHW Act - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) - ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 23 | சட்டப்பிரிவுகள் | இ.த.ச பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), 506(ii), r/w 4 of TNPHW Act. |
| 24 | தீர்ப்புரை | முடிவாக – 1-ம் எதிரியை, இ.த.ச பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), r/w 4 of TNPHW Act - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளை இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii)-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரிகள் பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 07.04.2025- ம் தேதி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 16.03.2026 - ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 செஞ்சி அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.பரமசிவம், B.com., B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும், இருதரப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கு** :-

கடந்த 29.06.2023 – ந் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் சாட்சி-1 முதல் 4 வரையிலானவர்கள் தனது வீட்டில் இருந்தபோது 1-ம் எதிரி சாட்சி-1ன் வீட்டின் அருகே வந்து அசிங்கமாக திட்டிக் கொண்டு இருந்தவரை இரவு 08.00 மணிக்கு அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டு ஏன் குடித்துவிட்டு அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டதற்கு 1-வது எதிரி சாட்சி-1 ஐ பிடித்து கீழே தள்ளி பின்பு புடவையை இழுத்துள்ளார். இதனை பார்த்த சாட்சி-2 முதல் 4 வரையானவர்கள் சென்று கேட்டதற்கு சாட்சி-4 ஐ இரும்பு ராடால் தக்கியும் பின்பு தடுக்க வந்த சாட்சி-3 ஐ 2 மற்றும் 3 எதிரிகள் தேவிடியா வெளியே வாடி உன்னை தீர்த்துகட்டி விடுகிறேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றங்களுக்காக, 1-ம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 352, 506(ii), r/w 4 of TNPHW Act-ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளை இ.த.ச.பிரிவுகள் 294(b), 506(ii) - ன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக அவலூர்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு பி.என்.எஸ்.எஸ் பிரிவு 230 - ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டுகள்** :-

வழக்காவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), r/w 4 of TNPHW Act - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) - ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு

குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளுக்கு படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறீரா? அல்லது விசாரணையை வேண்டுகிறீரா? என

வினவப்பட்டது. எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தனர்.

எனவே, அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர் படுத்தப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**:-

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 ஆகிய சாட்சிகள் விசாரிக்கபட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.1 (முனியம்மாள்)** இவர் இவ்வழக்கின் சம்பவத்தை பற்றியும், புகார் மனு கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.1 (புகார் மனுவில் உள்ள அவரது கைரேகை**) குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அ.சா.2 (பெரியசாமி)**, **அ.சா.3 (தணிகைமலை)** இவர்கள் இவ்வழக்கின் கேள்விநிலை சாட்சியாவார்கள்.

**அ.சா.4 (பூங்காவனம்)** இவர் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாவார்.

**அ.சா.5 (ரமேஷ் - சிறப்பு உதவி ஆய்வாளர்)** இவர் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இவர் மூலம் **அ.சா.ஆ.2 (புகார் மனு), அ.சா.ஆ.3 (முதல் தகவல் அறிக்கை), அ.சா.ஆ.4 (பார்வை மகசர்), அ.சா.ஆ.5 (மாதிரி வரைபடம்) மற்றும் அ.சா.ஆ.6 (சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை)** ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்புகள் விசாரிக்கப்பட்ட பின்பு, அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமான பகுதிகள் குறித்து பிரிவு 351 (1)(b) – பி.என்.எஸ்.எஸ் - ன் படி வினவிய போது, எதிரிகள் அந்த சாட்சியங்களை மறுத்தார்கள்.

**5. எதிரிகள் தரப்பு வழக்கு**:-

அவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது எதிரிகள் தரப்பு வழக்கு.

ஆனால், எதிரிகள் அவர்கள் தரப்பில் எந்த வித சாட்சியங்களும் இல்லை என குறிப்பிட்டார்கள்.

**6. இருதரப்பு வாதங்கள்** :-

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் அவருடைய வாதத்தில், அ.சா.1 (முனியம்மாள்) இவ்வழக்கின் புகார்தாரர் என்றும், அவர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 (முனியம்மாள்) மற்றும் எதிரிகள் தரப்பில் சம்பவம் குறித்து சமாதானம் ஆகிவிட்டதாக 359 பி.என்.எஸ்.எஸ் பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு ஆனது எம்.பி.எண்.1/2026 ஆக எண்ணிடப்பட்டு, அதில் இ.த.ச பிரிவு 294(பி) - ன் படியான குற்றம் இரு தரப்பினர்களிடையே சமரசம் செய்ய முடியாது என்பதால் அம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

எதிரிகள் தரப்பில், வாதிடும்போது, குற்றத்தை யார் புரிந்தார் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் படி நிரூபிக்க தவறியதால், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கமாறு வாதிடப்பட்டது.

**7. தீர்வுக்குரிய பிரச்சனை:-**

**(அ) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபித்துள்ளதா?**

**(ஆ) ஆம், எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?**

**(8.1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அ.சா.1 (முனியம்மாள்) இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். மேற்படி அவர் அளித்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், எதிரிகளின் மீது அ.சா.ஆ.3 (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரிலுள்ள விவரங்களை பொறுத்து அ.சா.1 அவருடைய முதல்

விசாரணையில், கடந்த 2023 ம் வருடம் ஒரு நாள்இரவு 08.00 மணியளவில் தானும், தனது மகன் மற்றும் மருமகள் ஆகியோர்கள் தங்கள் வீட்டில் இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத ஒரு நபர்கள் வந்து தன்னை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டதாகவும், அதில் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், காயமடைந்த தாங்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இதுசம்மந்தமாக அவலூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்ததாகவும், புகார் மனுவில் உள்ள கைரேகை தன்னுடையது என்றும், அதில் உள்ள விவரம் தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.2)** கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில், கடந்த 2023 ம் வருடம் ஒரு நாள்இரவு 08.00 மணியளவில் தானும், தனது மாமியார் மற்றும் தனது கணவர் ஆகியோர்கள் தங்கள் வீட்டில் இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் தங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டதாகவும், அதில் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், காயமடைந்த தாங்கள் அனைவரும் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி நபர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையின் போதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை.

**(8.3)** அ.சா.5 (ரமேஷ் - சிறப்பு உதவி ஆய்வாளர்) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அல்ல என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி நபர் அவரது சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, அ.சா.1-ன் புகார் மனுவினை பெற்று எதிரிகளின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று சாட்சிகள்

முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும் இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெற்றது பற்றியும், இவ்வழக்கின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமைந்துள்ளது.

**(8.4)** இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் எதிரிகளுக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது என்பதும், எதிரிகளும், அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்கள் உறவினர்கள் என்பதும் வழக்காவணங்களின் மூலம் தெரிய வருகிறது. அ.சா.4 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்திருந்த போதிலும், பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.4-ம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.5 – ன் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றத்தை எதிரிகள் தான் செய்தனர் என்று கருத இயலாது. மேலும், வழக்கின் மற்ற சாட்சிகளான பட்டியல் சாட்சிகள் 4 முதல் 9 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. எனவே, அரசு தரப்பு அதன் வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளதை தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக – 1-ம் எதிரியை, இ.த.ச பிரிவுகள் 294(b), 324(2 எண்ணிக்கைகள்), r/w 4 of TNPHW Act - ன் கீழும், 2 மற்றும் 3 எதிரிகளை இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii)-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரிகள் பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1) - ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதி கொடுத்திருக்கும் பிணைமுறி ஆவணங்கள்

மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்பு ரத்தாகி விடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9.சொத்து பற்றிய ஆணை :-** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகையால் அதை பற்றிய உத்தரவு எதுவுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகிரப்பட்டது.

B VIDHYA

Digitally signed by B VIDHYA
Date: 2026.03.16 17:40:35 +0200

**நீதித்துறை நடுவர்,**
**செஞ்சி**

**பின் இணைப்பு:-**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

அ.சா.1 முனியம்மாள் (புகார்தாரர்)

அ.சா.2 பெரியசாமி

அ.சா.3 தணிகைமலை

அ.சா.4 பூங்காவனம்

அ.சா.5 ரமேஷ் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்

அ.சா.ஆ.2 புகார் மனு

அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 பார்வை மகசர்

அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** - இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** :- இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றுபொருள் :** - இல்லை.

B VIDHYA
Digitally signed by B VIDHYA
Date: 2026.03.16 17:40:14 +0200

**நீதித்துறை நடுவர்,**

**செஞ்சி**

**குறிப்பு-**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.